MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

04-10-2020 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சார்வரி வருடம் (புரட்டாசி 18) | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 57 | இதழ் 39 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள் திரு. ஆ.அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள் திரு. இர.ஜெயந்த் ராயன்

## மனிதரின் திறமைகள், மாண்பை மதிப்போம்

கடந்த பல மாதங்களாக, இவ்வுலகை அச்சுறுத்திவரும் கொரோனா தொற்றுநோய் குறித்து, ஆகஸ்ட் மாத துவக்கத்தி-ருந்து 'உலகை குணப்படுத்தல்' என்ற தலைப்பில் தன் சிந்தனைகளை, புதன் மறைக்கல்வி உரைகளில், ஒரு தொடராக பகிர்ந்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செப்.23ம் தேதி, ஒன்றிணைந்து பணியாற்றுதல் என்ற கருத்தில் உரையைத் தொடர்ந்தார். முத-ல் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் 12ம் பிரிவி-ருந்து ஒரு பகுதி, பலமொழிகளில் வாசிக்கப்பட்டது. 1கொரி 12.14.21-22.24-25.

உடல் ஒரே உறுப்பால் ஆனது அல்ல, பல உறுப்புகளால் ஆனது. கண் கையைப் பார்த்து. நீ எனக்குத் தேவையில்லை என்றோ தலை கால்களைப் பார்த்து நீங்கள் எனக்கு தேவையில்லை என்றோ சொல்ல முடியாது. மாறாக, உட-ல் மிக வலுவற்றனவாய்த் தோன்றும் உறுப்புகளே மிகவும் தேவையானவையாய் இருக்கின்றன. மதிப்புக் குறைந்த உறுப்புகளுக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தே கடவுள் உடலை ஒன்றித்து உருவாக்கினார். உட-ல் பிளவு ஏற்படாமல், ஒவ்வொரு உறுப்பும் மற்ற உறுப்புகளின் மீது ஒரேவிதக் கவலை கொள்ளவேண்டுமென்றே இப்படிச் செய்தார். இந்த வாசகத்திற்குப்பின், திருத்தந்தையின் மறைக்கல்வியுரை துவங்கியது.

**மறைக்கல்வியுரை**

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே தற்போதைய கொள்ளை நோயின் விளைவுகளை, திருஅவையின் சமுதாயப் படிப்பினைகளின் ஒளியில் சிந்தித்துவரும் நாம், நம் சகோதரர், சகோதரிகளுடன், குறிப்பாக ஏழைகள், பாதிப்படைய வாய்ப்புடையோர், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோருடன் ஒருமைப்பாட்டுணர்வைக் கொண்டிருக்க வேண்டிய தேவை குறித்து சிந்தித்தோம். தனிப்பட்டவர்களும், பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், விசுவாசிகள் என்ற முறையில் இவ்வுலகிற்கு குணப்படுத்துதலையும், நம்பிக்கையையும் வழங்கும் நோக்கத்தில் ஒன்றிணைந்து உழைக்க நாம் அழைப்புப் பெற்றுள்ளோம்.

ஒருமைப்பாடு என்பது, சமுதாயத்தின் ஒவ்வொரு துணையமைப்பையும் மதித்து ஏற்பதை உள்ளடக்குகின்றது. சமுதாயத்தின் அனைத்துப் படிநிலைகளும், அதாவது அரசு நிர்வாகம் அதன் கீழுள்ளவை, குடும்பங்கள், திருஅவை ஆகியவை சமுதாயம் எனும் துணிவை பின்னி உருவாக்கும் நூல்களாக இருந்து புத்துயிரளிக்கும் பங்கைக் கொண்டுள்ளன. புனித பவுல் எடுத்துரைப்பதுபோல, உட-ன் சில உறுப்புகள் மிக வலுவற்றனவாய் தோன்றினாலும் உடல் நன்முறையில் செயல்பட அனைத்து உறுப்புக்களும் தேவை.

கொள்ளைநோய்க் காலத்தில் முடங்கிப்போயிருந்த மக்களுக்கு ஆற்றிய பணிகள் பாராட்டும்படியாக இருந்தன. வருங்காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நம் பாதையில், சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் திறமைகள், மற்றும் மாண்பை மதிப்போம். நீதியுடன் கூடிய சமூக ஒழுங்கமைவை கட்டியெழுப்பி, சமூக நெருக்கடி களி-ருந்து வெளிவருவதற்குத் தேவையான முயற்சிகளில், ஒருமைப்பாடு மற்றும் துணையமைப்புகளாக ஒன்றிணைந்து உள்ளோம் என்ற கொள்கைகள் நம் முயற்சிகளுக்கு வழிகாட்டிகளாக இருக்கட்டும்.

இவ்வாறு தன் புதன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை அவர்கள், முதியோர், இளையோர், நோயுற்றோர், புதுமணத் தம்பதியர் ஆகியோரை நோக்கி தன் எண்ணங்கள் செல்வதாக எடுத்துரைத்தார். இப்புதனன்று. இத்தா- நாட்டைச் சேர்ந்தச் பியெத்ரெல்சீனாவின் புனித பியோ அவர்களின் விழா சிறப்பிக்கப்படுவதை நினைவூட்டிய திருத்தந்தை அவர்கள், விசுவாசம் மற்றும் பிறரன்பின் சாட்சியாகவும், ஒப்புரவு எனும் அருளடையாளத்தை சோர்வின்றி நிறைவேற்றியவராகவும் செயல்பட்ட புனித பியோ அவர்களின் எடுத்துக்காட்டை முன்வைத்தார்.

## சிவகங்கை மறைமாவட்ட மேதகு ஆயர் சூசை மாணிக்கம் ஓய்வு பெற்றார்.



தமிழகத்தின் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் செபமாலை சூசைமாணிக்கம் அவர்கள் பணி ஓய்வு பெறுவதற்கு சமர்ப்பித்திருந்த விண்ணப்பத்தை செப்டம்பர் 25, கடந்த வெள்ளியன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்.

1945ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி பிறந்த ஆயர் சூசைமாணிக்கம் அவர்கள், 1971ம் ஆண்டில் அருள்பணித்துவ வாழ்வுக்குத் திருப்பொழிவு செய்யப்பட்டார். இவர், 2005ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி சிவகங்கை மறைமாவட்டத்திற்கு வாரிசு ஆயராகவும், அதே மறைமாவட்டத்திற்கு ஆயராகவும் நியமிக்கப்பட்டார்.

கடந்த செப்டம்பர் 25ம் தேதியுடன் தன்னுடைய ஆயர் பணியை நிறைவுசெய்து பணி ஓய்வு பெற்றுள்ளார். அன்பு ஆயர் அவர்கள் சிவகங்கை மறை மாவட்டத்திற்கும், தமிழகத் திருஅவைக்கும், இந்தியத் திருஅவைக்கும் ஆற்றிய அரும்பணிகளுக்காக நன்றி கூறுகிறோம். தொடர்ந்து ஆயர் அவர்களின் உடல், உள்ள நலன்களுக்காகச் சிறப்பாக மன்றாடுவோம்.

நன்றியும் செபங்களும்

**மேதகு பேராயர், குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள்**

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்

ஆசிரியர் பேனா...

# இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்

**தொடர்பாடல்** (Communication) என்பது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு தகவலைக் கடத்துதலாகும். இது பொதுவாக மொழியூடாகவே நடந்து வருகின்றது. தகவல் தொடர்பானது ஒரு மூலத்திலிருந்து மற்றொன்றுக்கு செய்திகளை மாற்றுவதாகும். பேச்சு, எழுத்து அல்லது குறியீடுகளின் மூலம் செய்திகள், கருத்துக்கள், சிந்தனைகளின் பறிமாற்றம் அல்லது அறிவித்தல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த நடைமுறையின் மூலம் சிந்தனைகள், உணர்ச்சிகள் மற்றும் எண்ணங்கள் ஒரு பொதுவான உடன்பாட்டுக்குள்ளான திசை அல்லது இலக்கை நோக்கிச் செல்கின்றன.

தொடர்புகொள்ளுதலை ஒரு கல்வி முறையாகக் கூட நாம் பார்க்கலாம். ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையில் நடைபெறும் செய்தி, கருத்து மற்றும் சிந்தனைப் பரிமாற்றம் மாபெரும் மாற்றத்தை மாணவர்களுக்கிடையே உருவாக்குவதை நாம் அறிகின்றோம்.

**மனிதனும் தொடர்பாடலும்:** மனிதன் தொடர்பாடும் கூற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். மனிதன் எப்போதும் குழுவாகவே வாழ விரும்புகிறான். தனியாக எவரும் வாழ விரும்புவதில்லை. குழுவாக வாழும்போது ஒருவர் மற்றவரிடத்தில் தொடர்பாடல் செய்ய ஒரு முறைமை தேவைப்பட்டதன் காரணமாகவே தொடர்பாடல் முறைகள் உதயமாயின. இந்தத் தொடர்பாடல் முறைகள் மனித வர்க்கத்தின் அளவுக்குப் பழமையானது என்பதை நாம் உணர வேண்டும். "அங்க அசைவுகள், மேளங்கள், ஒலியெழுப்புதல், உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், நெருப்பு" போன்றவை பண்டையத் தொடர்பாடலில் முதன்மையாக இருந்ததை நாம் அறிய முடிகிறது.

மனிதன் உடல் அசைவுகளாலும், குரலாலும், சொற்களாலும் நேருக்கு நேர் தொடர்பு கொள்கிறான். 55% உடல் அசைவுகளாலும், சைகைகளாலும்,நேர்கொண்ட பார்வையாலும், 38% குரலாலும், 7% கருத்துக்களாலும், சொற்களாலும் ஏற்படுகின்றன என்று ஓர் ஆய்வின் முடிவு விளக்குகிறது. இதனின் சதவிகிதம் பேச்சாளரையும், கவனிப்பவரையும் பொருத்து வேறுபட்டாலும் தொடர்பு கொள்ளும் நோக்கம் ஒன்றாகவே இருக்கிறது. எனவே ஒருவருடைய சிந்தனை அவருடைய பேச்சாலும், நயத்தாலும், குறியீடுகளினாலும் பிறருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதை நாம் நன்கு உணர முடிகின்றது.

முதலில் சைகை, பேச்சு என்று துவங்கிய தொடர்பாடல் மெல்ல மெல்ல மொழிகளாக விரிவாகத் துவங்கின. பேச்சு வடிவத்திலிருந்த தொடர்பாடல் பின்னர் எழுத்து வடிவத்திற்கு மாறியது. உரையாடல், எழுத்து அல்லது சொற்களின் மூலம் பகிரப்பட்ட தொடர்பாடல் பின்னர் சொற்கள் இல்லாமல் தகவல் தொடர்பு கொள்ளுதல் நிலைக்கு உருவானது. வார்த்தைகள் இல்லாமல் செய்திகளை அனுப்பிப் பெறுவதை சொற்கள் இல்லாத தொடர்பு என்று கூறுவர். சொற்கள் இல்லாமல் தகவல் தொடர்பு கொள்ளுதல் மனிதனின் தினசரி வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாகும். இதில் குறியீடுகள், உடல் அசைவுகள், குரல் சொற்கள், உணர்ச்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**காட்சி ஊடகங்களின் வழி தொடர்பாடல்:** காட்சித் தொடர்பியல் (Visual Communication) என்பது சிந்தனைகளும் செய்திகளும், படித்து அல்லது பார்த்துப் புரிந்துகொள்ளும் வடிவங்களாக காண்பிக்கப்படுகின்றன. குறிகள், அச்சுக்கலை, ஓவியம், வரைகலைப் படிவம், படங்கள் என்று பார்வை சார்ந்த தொடர்பாடலை மையப்படுத்தி நம்மை எளிதாக ஈர்க்கக் கூடிய, செய்தியை நம்ப வைக்கக்கூடிய பணியை காட்சி ஊடகம் விரைவாகச் செய்கிறது.

**மெய்நிகர் உண்மை** (Virtual Reality) **வழி தொடர்பாடல்:** காட்சித் தொடர்பியலிலிருந்து இப்போது உலகம் மெய்நிகர் உண்மை தொடர்பியலுக்குச் சென்றிருக்கிறது. மெய்நிகர் உண்மை என்பது கணிணியால் உருவாக்கப்பட்ட தோற்றங்களை உண்மையான உருவம் போல் தொடர்புபடுத்திக் காட்டுவது. இது இன்றைய சமுதாயத்தின் மாணவர்களை, இளையோரை உண்மைத் தொடர்பியலிலிருந்து விலக்கி வைத்திருக்கிறது என்று சொல்லலாம். மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த தொடர்பியலை அறுத்து, மனிதனுக்கும் இயந்திரத்துக்குமான தொடர்பை உருவாக்கி மனிதனை மழுங்கடித்திருக்கிறது.

**தொடர்பாடலும் கிறித்தவமும்:** தொடர்பாடலுக்கும் கிறித்தவத்துக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. கிறிஸ்து தொடர்பாடலின் முன்மாதிரி. தன்னுடைய பார்வையாலும், உடல் மொழியாலும், நற்செய்தி அறிவிப்பினாலும், உடனிருப்பினாலும் அதை நிரூபித்திருக்கிறார். அந்தத் தொடர்பாடலைப் பயன்படுத்தி திருஅவையும் அதற்கு முக்கியத்துவம் அளிப்பதை நாம் அறிகின்றோம். "ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளைத் திறமையோடும் திருத்தூது உணர்வோடும் நிறைவேற்றித் தொழில் நுட்பம், பொருளியல், பண்பாடு, கலை போன்றவற்றில் தங்களால் இயன்ற வகையில் திருச்சபையின் அருள்பணியில் நேரடியாக உதவ வேண்டும்" (சமூகத் தொடர்பு கருவிகள் 13. வத்திக்கான் சங்க ஏடுகள்) "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர்" என்று திருத்தூதர் பவுலின் கூற்றுக்கிணங்க பழங்காலக் கலைச் செல்வங்களால் ஆண்டவரின் பெயர் அன்று புகழப்பட்டதுபோல, தற்காலக் கண்டுபிடிப்புகளாலும் அவர் பெயர் புகழப்பட வேண்டும் என்பதே திரு அவையின் நோக்கமாக இருக்கிறது.

**தொடர்பாடலும் நற்செய்தி அறிவிப்புப் பணியும்:** நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது கிறித்தவர்களின் அடிப்படை கடமையாக உள்ளதை நாம் நன்கு உணர்வோம். அக்டோபர் மாதத்தை திருஅவை மறைபரப்பின் மாதம் என்று கொண்டாடுகின்றது. இவ்வேளையில் திருத்தந்தையின் வார்த்தைகளை நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். கிறித்தவர்களாகிய நமக்கும் இச்சமுதாயத்துக்கும் இடையே இருக்கும் தொடர்பாடலைப் புதுப்பித்துக்கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். வாழ்விற்கான ஏக்கமும், தீமையிலிருந்து விடுதலை பெறுவதற்குரிய நம் முயற்சியும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார். "நற்செய்திக்கு நாம் சான்றாக இருந்து, அதனை அறிவிக்கும்போது, இதயங்களையும், சமுதாயங்களையும், கலாச்சாரங்களையும் இறைவன் புதுப்பித்து மாற்றுகிறார்" என்கிறார்.

இந்த இக்கட்டானச் சூழ்நிலையில் நற்செய்தியோடும், சமுதாயத்தோடும் குறிப்பாக, தொற்றுநோய் நெருக்கடியால் தனிமையிலிருக்கும், வேலைவாய்ப்புகளை இழந்து தவிக்கும், வாழ்வாதாரம் இழந்திருக்கும் மனிதர்களுக்கு "இதோ நானிருக்கிறேன்" என்ற தொடர்பாளர்களாக நம்மால் இருக்க முடிகிறதா?

"இதோ நானிருக்கிறேன்" என்றுச் சொல்லி ஏற்றுக்கொண்டிருக்கும் கிறித்துவ வாழ்வில், நாம் மறுக்கும் ஒவ்வொரு உதவிகளும், தேவைகளும் நம்மை மக்களின் தொடர்பிலிருந்து அந்நியப்படுத்தும். கிறிஸ்துவின் தொடர்பியலால் உருவாக்கப்பட்ட இத்திருஅவை நம்முடைய மறுப்பினால் விலகிச் சென்றுகொண்டிருப்பதை இக்காலம் நமக்கு உணர்த்துகிறது.

தொடர்பு படுத்துவோம்! சாதியை, அதிகாரத்தை, பணத்தை, படிப்பை, அந்தஸ்தை வைத்து அல்ல; அன்பையும், இரக்கத்தையும், ஆதரவையும் கொண்டு நம்மையும் பிறரையும் தொடர்புபடுத்துவோம். "தொடர்பாடலைப் புதுப்பிப்போம்."

துணை ஆசிரியர்.

## ஆண்டின் பொதுக்காலம் 28-ம் ஞாயிறு

11-10-2020

எசா.25:6-10அ
பிலிப்.4:12-14,19-20 மத்.22:1-14



அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி, புதுவை.

நம் வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்தது, குறைகளும் நிறைகளும் இணைந்தது, வறுமையும் வளமையும் சேர்ந்தது. பல நேரங்களில் இன்பத்தை, நிறைகளை, வளமையைக் கண்டு நாம் மகிழ்ச்சியுறுகிறோம். வறுமைகளை, குறைகளை, துன்பங்களைக் கண்டு துவண்டுவிடுகின்றோம். ஏன் இன்னும் ஒருபடி மேலே சென்று வறுமையில், துன்பத்தில் கடவுளைப் பார்த்து புலம்பி, அவரை வசைபாடுகின்றோம். அவ்வாறு இல்லாமல் நாம் வறுமையிலும் வளமையிலும் சம நிலையோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இன்றைய வார்த்தை வழிபாடு நமக்கு அறிவுறுத்துகின்றது. இங்கு வாழ்க்கை என்பது வசதி வாய்ப்புகளோடு, பணக்கார வாழ்வு வாழ்வது அல்ல. மாறாக இறைவனோடு இணைந்த வாழ்வு, ஆன்மீக வாழ்வு, அவர்தரும் அழைப்புக்கேற்ற வாழ்வு.

**இன்பத் துன்ப நடுநிலை கோட்பாடு:** இயேசு வாழ்ந்த காலத்தில் கிரேக்க நாட்டுத் தத்துவங்கள் அதிகமாகக் காணப்பட்டன. அதில் ஸ்டாய்சிசம் - stoicism என்பது ஒரு பிரபலமான கோட்பாடு. அதாவது, நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களை நாம் சமநிலையோடு ஏற்று வாழ்கின்றபோதுதான் நமக்கு மனநிறைவு கிடைக்கும் என்பது அந்த கிரேக்க கோட்பாட்டின் தத்துவம். இதனை சீனோ என்ற பண்டைக் கால கிரேக்க அறிஞர் உருவாக்கினார். அப்போதைய உரோமை அரசர்களும், அமைச்சர்களும் கூட இதனைப் பின்பற்றினார்கள். இதிலுள்ள அடிப்படையான கருத்துக்கள் என்னவென்றால் ஆசையே நாம் மனநிறைவை பெறாமல் இருப்பதற்கு முக்கியக் காரணம். நாம் கடவுள் மீது, மனிதர்கள் மீது, பிற பொருட்கள் மீது பற்று கொண்டிருக்கக் கூடாது, இவர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும் என்பதாகும். இதன் மூலம் நாம் கடவுளை அன்பு செய்யவோ, அடுத்தவர் மீது பரிவு, இரக்கம் கொள்வதற்கோ இங்கு இடமில்லை. எனவே இதற்கு மாறாக இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகளார், "எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும்'' என்று தன்னுடைய வாழ்வை பி-ப்பியருக்கு முன்மாதிரிகையாகக் காண்பிக்கின்றார். இந்த வாழ்வை ஏதோ நமது சக்தியால், நமது ஆற்றலால் மட்டுமே அடைய முடியாது. எனக்கு வலுவூட்டும் இறைவன் மூலமே எனக்கு எதையும் செய்ய ஆற்றலுண்டு என்பதே புனித பவுல் நமக்குக் கற்பிக்கும் பாடம். பவு-ன் வாழ்வு நமக்கெல்லாம் முன் மாதிரிகையாக அமைய வேண்டும். "ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன், மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்" (எபி.13.6) என்று திடமுடன் நாமும் நம் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். துன்பத்திலே துவண்டுவிடுவதும், இன்பத்திலே இறுமாப்புக் கொள்வதும், வறுமையில் வாடுவதும், வளமையில் அகந்தையுறுவதும் நமக்குப் பழக்கமாகிவிட்டன. வறுமையும், துன்பமும் அடுத்தடுத்து வரும்போதும், வளங்களும் நலன்களும் வரிசைகட்டி நம் வாயில்முன் நிற்கும்போதும் நம்மை நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது.

**வளமான விருந்து:** இன்றைய நற்செய்தியில் இயேசு இறையாட்சியை திருமண விருந்திற்கு ஒப்பிடுகின்றார். கடவுள் நமக்குத் தரும் விருந்து மீட்பின் விருந்து, வளமான விருந்து. இந்த உவமையில் அரசர் தனது மகனுடைய திருமண விருந்தில் கலந்து கொள்ளும்படி பலருக்கு அழைப்பு விடுக்கின்றார். ஆனால் அழைப்புப் பெற்றவர்களோ நான் என் வயலுக்குப் போக வேண்டும், நான் கடைக்குச் செல்ல வேண்டும் என சாக்குப் போக்குச் சொல்- வர மறுத்ததால் அழைப்பு மற்றவர்களுக்குத் திறந்துவிடப்படுகிறது. இப்பொழுது கொரோனா தொற்று நோய் பரவுவதற்கு முன்பாக ஒவ்வொரு நாளும் திருச்சபை நம்மை நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு அழைத்தது. அப்போது விருந்தினர்கள் வந்திருக்கின்றார்கள், மழை பெய்கிறது, சுற்றுலா செல்ல வேண்டும், தேர்வுக்கு படிக்க வேண்டும் என்று குறை கூறினோம். இப்பொழுது கொரோனா தொற்று நோயால் ஆலயங்களில் திருப்ப- இல்லை என்று குறை கூறிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் எல்லா ஆலயங்களும் திறக்கப்பட்டிருக்கின்றன. நற்கருணை ஆண்டவரைச் சந்திக்க, குடும்ப செபம் சொல்ல இப்பொழுதும் நேரமில்லை என்று சாக்குபோக்கு சொல்-க் கொண்டிருக்கின்றோம். நமது வேலைகளும், கவலைகளும் ஓய்ந்தபின் கடவுளை நினைப்பது ஒருபோதும் நடக்காத காரியம். கிறிஸ்து நம் உள்ளக் கதவையும் இல்லக்கதவையும் தட்டும்போது வளமான விருந்தை தட்டிக்கழிக்கலாமா?



### வாரச் சிந்தனை

### "வறுமையிலும்...வளமையிலும்..."

**திருமண ஆடை:** இன்றைய நற்செய்தியில் இயேசு கூறிய உவமையில் அரசன் ஒருவரைப் பார்த்து ''தோழா திருமண ஆடையின்றி எவ்வாறு உள்ளே வந்தாய்?'' என்று கேட்கின்றார். திருமண ஆடை என்பது திருமண விருந்திற்கு வரும் அனைவருக்கும் விருந்து வைப்பவர் கொடுக்கும் பரிசு எனலாம். மண்டபத்திற்குள் நுழையும்போது அவர்களின் உடல் அளவிற்கேற்ப உடைகள் கொடுக்கப்படும். அப்படிப் பரிசாகக் கொடுக்கப்பட்ட ஆடையைத்தான் அந்த நபர் அணிய மறுத்திருக்கிறார். நாமும் திருமுழுக்கு பெற்றபோது புதுப்பிறப்பின் அடையாளமாக நமக்கு வெண்ணிற ஆடை அளிக்கப்பட்டது. நாம் திருமுழுக்கு பெற்றுவிட்டோம், கிறிஸ்தவராக மாறிவிட்டோம் இனிமேல் நமக்கு என்ன வேலை? என்று நினைக்கின்றோம். திருமண ஆடை என்பது மனந்திரும்பிய நற்செயல்கள் நிரம்பிய வாழ்வைக் குறிக்கின்றது. நம் சிந்தனை. சொல், செய-ல் ஏற்படுகின்ற மாற்றத்தைத்தான் விருந்தின் வெளி அடையாளமாக, புதிய ஆடையாக இறைவன் நம்மைப் பார்த்துக் கேட்கிறார். எனவே திருமண ஆடையாம் நீதிச்செயல்களை (திவெ.19.8) செய்து இறைவன் தரும் விருந்தை (அழைப்பை) பெற்றுக்கொள்ள வேண்டும், அவர் தரும் வாழ்வைப் பெற்று மகிழ வேண்டும்.

**வறுமையிலும்... வளமையிலும்...:** கொரோனா தொற்று நோயால் தொழிலை இழந்து, பொருளாதாரத்தை இழந்து, வியாபாரத்தை இழந்து மக்கள் வறுமையில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். இந்த நோய் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்வில் ஏற்படுகின்ற துன்பங்கள், துயரங்கள், இழப்புகள், காயங்கள் அவற்றினால் ஏற்படும் வறுமை சொல்-ல் அடங்கா. எனவே இப்படிப்பட்ட எந்தச் சூழ்நிலையாய் இருந்தாலும் நாம் ஆண்டவரோடு இணைந்து கடவுளின் அழைப்புக்கேற்ற வாழ்க்கை வாழும்போதுதான் வறுமையிலும் வளமையிலும் சமநிலையோடு மனநிறைவோடு வாழமுடியும். பசி - நிறைவு, விருந்து - வெறுமை, நிறைவு-குறைவு, வறுமை - வளமை என எல்லாவற்றையும் ஒரே மனநிலையில் எடுத்துக்கொண்டு எனக்கு வறுமையிலும் வாழத்தெரியும் வளமையிலும் வாழத்தெரியும். என மார்தட்டி பவுல் அடிகளார் கூறுகிறாரென்றால் அவருக்கு உந்து சக்தியாக இருந்தது கிறிஸ்து ஒருவரே. அதனால்தான் ''வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்.'' (கலா.2.20) என தொடர்ந்து அவரால் கூறமுடிந்தது. ''யாராவது எனது குரலைக்கேட்டு கதவைத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்'' (திவெ 3.20) என்று இறைவன் இருகரம் விரித்து அழைக்கின்றார். அவரில் இணைந்து நம் வாழ்வில் வறுமையிலும் வளமையிலும் வாழ நாம் தயாரா?

# கோழியும் ரோஜாச் செடியும்



ஜெயராஜ் தானியேல், முத்தியால்பேட்டை, புதுவை.

அந்த நந்தவனத்தில் வகை வகையான வண்ணமிகு மலர்கள் பூத்துக் குலுங்கின. அங்கே ஒரு வெள்ளை ரோஜாச் செடி நாள் தவறாமல் பூத்துக் குலுங்கும். கதிரவனைப் பார்த்து மலர்கள், "அண்ணா, வணக்கம்", என்று சேர்ந்திசை பாடும்.

ஒரு நாள் கதிரவன் எழுந்த பொழுது, அந்த ரோஜாச் செடி வாடியிருந்தது. திடுக்கிட்ட கதிரவன், "ஏன் வாட்டமாயிருக்கிறாய்?" என்று வினவியது. அதற்கு ரோஜாச் செடி "ஒரு கம்பளிப் புழு என் இலைகளைக் கபளீகரம் செய்துவிடுகிறது", என்று சோகமாக சொல்லியது. இதைக் கேட்ட கதிரவனும், "உன் வருத்தம் தீரும் வரை நான் ஒளிவீச மாட்டேன்", என்று சொல்லி மேகங்களுக்கிடையில் தன்னை மறைத்துக் கொண்டது. கதிரவன் மறைவதைப் பார்த்த காற்று, "ஏன் இப்படி?" என்று கேட்டது. அதற்குப் பகலவன், "எனதருமை ரோஜாச் செடியின் இலைகளை ஒரு கம்பளிப் புழு தின்று விடுகிறது. அதனால் வாடிவதங்கிவிடுகிறது. அது மீண்டும் புத்துயிர் பெறும் வரை நான் ஒளிரப் போவதில்லை," என்றது. "அப்படியா! சரி. அது மீண்டும் மலரும் வரையில் நானும் வீசமாட்டேன்", என்று காற்று வீசுவதை நிறுத்திவிட்டது.

பாடிப்பறந்து கொண்டிருந்த வானம்பாடி காற்று வீசாமல் இருப்பதைக் கவனித்து காரணத்தை அறிந்து கொண்டது. "சரி. இனி நானும் பாடமாடடேன்" என்று சொல்லி அமைதியாக தன் கூட்டை நோக்கிச் சென்றது. வானம் பாடியின் சோகத்திற்கான காரணத்தை அறிந்த பாதாம் மரம், "தான் இனி கொட்டைகளை உதிர்ப்பதில்லை" என்று சபதம் செய்தது. கொட்டைகளைத் தேடி வந்த அணிலும் "தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தது." பிறகு, அணில் தன் மரப்பொந்தினுள் நுழையச் செல்லும் வழியில் ஒருகோழியைச் சந்தித்தது. அணிலிடமிருந்து சேதியைக் கேட்ட கோழி சிரித்துக் கொண்டே, "இப்படி ஒவ்வொருவரும் தன் கடமையைச் செய்யவில்லையென்றால் ரோஜாச்செடி எப்படி புத்துயிர் பெறும்? மாறாக, நம்மால் என்ன உதவி செய்ய முடியும் என்று பார்க்கலாமே," என்று சொல்லி அணிலை அழைத்துக் கொண்டு அந்த ரோஜாச் செடியிடம் சென்றது கோழி. ரோஜாச் செடி கோழிக்கு வணக்கம் சொல்வதற்கு முன்பாகவே அந்தக் கம்பளிப் புழுவை தன் அலகால் கொத்தி 'லபக்' செய்தது கோழி, "பார்த்தாயா, அணிலே! ரோஜாச் செடியைக் காப்பாற்றிய அதே நேரம் எனக்கு அருமையான உணவும் கிடைத்துவிட்டது", என்று சொல்லி மகிழ்ந்தது.

ரோஜாச் செடி மீண்டும் மலர்ந்ததைக் கண்ட கதிரவனும் "அட, நானும் கொஞ்சம் யோசித்திருந்தால், என் கதிர்களைச் சூடாக்கி அந்தப் புழுவைப் பொசுக்கியிருக்கலாமே", என்று வருந்தியது. "நானும் பலமாக வீசி அதை அப்புறப்படுத்தியிருக்கலாமே", என்றது காற்று. "கோழிக்குக் கிடைத்தது போலவே எனக்கும் உணவு கிடைத்திருக்குமே", என்று அங்கலாய்த்தது வானம்பாடி. பாதாம் மரமும் கொட்டைகளை உதிர்த்து அணிலின் பசியைப் போக்கியது. இந்த இரண்டும் தங்களால் உதவ முடியவில்லையே என்று புலம்பின. எதுவும் பேசாமல் மௌனமாய் குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது கோழி.

இந்தக் கோழியின் செயல், நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட அருட்கொடையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணிபுரிவதே நல்லது (1பேதுரு 4:10) என்பதை வலியுறுத்துகிறது அல்லவா!

# ஒன்றே குலமென்று பாடுவோம்



– அல்போன்ஸ் மோசஸ் -புதுச்சேரி-9.

இந்த வார சர்வவியாபி நம் கையில் தவழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை வழியில் நமக்கெல்லாம் சுதந்திரம் வாங்கித் தந்த நமது மகாத்மா காந்திஜியின் பிறந்த நாளை நாம் கொண்டாடிக் கொண்டிருப்போம்.

தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள நீதிமன்றத்தில் தலைப்பாகை அணிந்து வாதாடக்கூடாது எனப் புறக்கணிக்கப்பட்ட நிகழ்வும், ஒரு நாள் பிரிட்டோரியா செல்வதற்காக இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தபோது வெள்ளையர் இல்லை என்ற காரணத்தால் பயணம் செய்ய மறுக்கப்பட்ட நிகழ்வும், தென்னாப்பிரிக்காவில் கறுப்பின மக்கள் மற்றும் அங்கு குடியேறிய இந்திய மக்கள் படும் துன்பங்களைக் கண்டு அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதில் வெற்றி கண்டதும் 1942ம் ஆண்டு ஆகஸ்டு 8ம்தேதி ஆங்கில அரசுக்கு எதிராக ஆகஸ்டு புரட்சி என்று அழைக்கப்படும் **வெள்ளையனே வெளியேறு** என்ற இயக்கத்தினை ஆரம்பித்ததும்தான் அவரை மேற்கொண்டு சீரிய முறையில் சிந்தித்து அகிம்சை வழியில் போராடி ஆங்கிலேயரிடமிருந்து நமக்குச் சுதந்திரம் பெற்றுத்தர பெரிதும் துணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

ஒரு வெள்ளையரும் கறுப்பரும் ஒரே பதவியில் ஒரே இடத்தில் பணிசெய்து கொண்டிருந்தனர். இருவருமே மேலதிகாரிகள்தான். அடிக்கடி பேசி பல விஷயங்களுக்கு முடிவெடுக்க வேண்டியிருந்ததால் நெருக்கமாகப் பழக நேரிட்டது. ஆனால் கருப்பர் நெருங்கிவர எண்ணினாலும் வெள்ளையர் தள்ளிச் சென்று கொண்டேயிருப்பார். நட்புப் பாராட்டமாட்டார். அலுவலகக் காரியங்களை மாத்திரமே பேசிவிட்டு நிறுத்திக்கொள்வார்.

அந்த அலுவலகத்தில் அந்த ஊர் வெள்ளையர் மட்டுமே அவருக்கு அதிகம் பழக்கம் ஆனவர்கள். பொறுத்துப் பார்த்த கருப்பர் ஒருநாள் வெள்ளையரின் அறைக்குச் சென்று "நண்பரே எனது படிப்பில் குறை கண்டு ஒதுக்கினால் நான் கற்று உமக்குச் சமமாகிட முடியும். நான் தீயபழக்கங்கள் உள்ளவனாக இருந்தால் என்னைத் திருத்திக் கொள்ள முடியும். நான் அழுக்கானவனாக இருந்தால் குளித்துத் தூய்மைப்படுத்திக் கொள்ளமுடியும். ஆனால் அனைத்திலும் நாம் ஒரே நேர் கோட்டில்தான் நிற்கிறோம்.

நீர் என்னை வெறுப்பது என் உடலின் நிறத்தை வைத்து என்பது மட்டும்தான் எனக்குப் புரிகிறது. அது கடவுளால் எனக்குத் தரப்பட்டது. அதை என்னால் எவ்விதத்திலும் மாற்றிக்கொள்ள முடியாது. இதை உணராமல் என்னைப் புறக்கணிப்பது எப்படி நியாயம்?" என்று ஆணித்தரமாக வெள்ளையரின் முகத்தில் அறைந்தது போல் கேட்டார்.

அன்று தான் வெள்ளையர் அவர் பேச்சில் இருந்த நியாயத்தை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டது மட்டுமின்றி அவரை நண்பராகவும் ஏற்றுக்கொண்டார்.

உலகம் போகின்ற போக்கினைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. பல்வேறு முக்கிய ஆன்மீகத் தலைவர்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், பாமரமக்கள் இப்படி யார், என்றைக்கு கொரோனா விரிக்கும் வலையில் வீழ்வார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது அது மர்மமாகவே இருந்து வருகின்றது.

**"நேற்றிருந்தார் இன்று இல்லை"** என்ற நிலைதான் உலகெங்கும் தற்போது நிலவிக் கொண்டிருக்கின்றது. 1946ம் ஆண்டுபிறந்து இசைத்துறையில் படிப்படியாக முன்னேறி 40,000 பாடல்களை 16 இந்திய மொழிகளில் பாடி **பத்மஸ்ரீ** மற்றும் **பத்மபூஷன்** போன்ற பல்வேறு தலைசிறந்த விருதுகளைப் பெற்றவரும் 40 திரைப்படங்களுக்கு இசை அமைத்தவரும் பல ஆயிரம் கிறிஸ்தவப் பாடல்களைப் பாடி நம்மை ஆன்மீகத்தில் பரவசப்படுத்தியவருமான 74 வயதுடைய திரு.**எஸ்.பி.பாலசுப்ரமணியன்** அவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை நினைக்கும்போது கண்களில் நீர் கசிகின்றது.

ஆனால் பலர் இன்னமும் இந்த உலகே நமக்குத்தான் சொந்தம் என்று நினைத்துக் கொண்டு சாதி மத, வேற்றுமை பார்த்து பிறரை இழிவுபடுத்தி வாழ்ந்து கொண்டிருப்பது வேதனையாக இருக்கின்றது. **என்று தணியுமோ இந்தச் சுதந்திரத் தாகம்?**

# வசந்தமாய் வாழ்வு

– அருட்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி திருப்பாப்புலியூர், கடலூர்.

13

**ஆசை அறுமின்**



ஆசையே வாழ்வின் உயிர் நாடி. ஆசையற்ற உலகில் உயிர்த் துடிப்பில்லை. ஆசையே ஒருவரது இலட்சியம், முயற்சி, உழைப்பு, வெற்றி ஆகிவற்றிற்கு தொடக்கமும், தூண்டுகோலுமாகும். எதைச் செய்தாலும் முழு ஆசையோடு செய்ய வேண்டும். நம் கனவுகள் நனவாக ஆசையே உந்து சக்தி. அடிப்படை ஆசை தவறல்ல. அடுத்தவரைப் பார்த்து ஏங்கி, நம் வாழ்வை மாற்றியமைக்க முற்படும்போது, அது அளவில்லாமல் நீண்டு, எதிலும் நிறைவடையால் ஆசைகளை அடுக்கி பின் அதிலேயே அகப்பட்டுக் கொள்கிறோம். நம் ஆசை பெரிதாக இருக்கலாம், ஆனால் பேராசையாக இருக்கக் கூடாது. ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டியதில்லை. மாறாக, 'தாமரை இலைத் தண்ணீர் போல்' வாழ்தலே சுகம்.

"உலகத்திலுள்ள அழியக்கூடிய மாயப் பொருள்களைப் பற்றி சிந்தனை செய்கின்ற மனிதனுக்கு அதன் மீது ஆசை உண்டாகிறது. அந்த ஆசை பெருகிப் பெருகி பேராசையாகிறது. தன்னால் அடைய முடியாது என்று நினைக்கும்போது அந்த ஆசை நிராசை ஆகிறது. நிராசை கோபமாக மாறுகிறது. கோபம் அறிவின்மையை ஏற்படுத்துகிறது. அறிவின்மை நினைவின்மையிலிருந்து புத்திக்கேடு உண்டாகிறது. புத்தி கெட்ட பின்பு அவன் அனைத்திலும் கெட்டவனாக ஆகிவிடுகிறான்." என்கிறது பகவத் கீதை. எனவேதான் மனிதனின் துயரங்கள் அனைத்துக்கும் ஆசையே காரணம் என்று தெளிவுபடுத்தினார் புத்தர்.

*ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்*
*ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்*
*ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்*
*ஆசை விடவிட ஆனந்தம் ஆமே!*

'ஆசையை விட்டொழியுங்கள். இறைவனோடு சும்மா ஒட்டிக்கொள்வதற்காகத்தான் என்றாலும்கூட ஆசையை விட்டுவிடுங்கள். ஆசைப்பட்டீர்கள் என்றால், ஆசைப்பட்டதை அடையவும், அடைந்ததைப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்ளவும் பல துன்பங்கள் படவேண்டியிருக்கும். ஆசையை விட்டீர்கள் என்றால், ஏதோ ஒன்றை அடைய வேண்டும் என்கிற துடிப்பும், அடைந்ததைப் பாதுகாக்க வேண்டுமே என்ற பொறுப்பும் இல்லாமல் விட்டு விடுதலையாகி பேரின்பம் பெருகும்' என்பது திருமந்திரம் சொல்லும் பாடம் ஆகும். ஆசைகள் நின்றுவிடும் இடத்தில் சுயதரிசனம் தொடங்குகிறது. சுயதரிசனம் இறைதரிசனத்திற்கு இட்டுச் செல்கிறது.

ஆசையை – மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று மூன்றாக வகுத்தார்கள் நம் முன்னோர்கள். காலம் அதனோடு புகழாசை (அ) அதிகார ஆசை என்ற ஒன்றை இணைத்து நான்காக ஆக்கி இருக்கிறது. குழந்தைப் பருவத்தில் வருவதெல்லாம் ஆபத்தில்லா ஆசைகள். இருபது வயதை எட்டுவதற்குள் பெண்ணாசை அரும்புகிறது. பெண் கிடைத்துவிட்டால் பொன்னாசை எழுகிறது. குடும்பம், பிள்ளைகள் என்றானதும் மண்ணாசை வளர்கிறது. பொதுவாக, மண்ணாசை கொலையில் முடிகிறது. பெண்ணாசை பாவத்தையும் சாபத்தையும் சேர்க்கிறது. பொன்னாசையால் களவு நிகழ்கிறது. புகழாசையோ எக்காலத்திலும் இருந்துகொண்டே இருக்கிறது. இதனால் போட்டி, பொறாமை, துரோகம், யாவும் தொடர்கின்றன. ஆசைகள் அற்ற இடத்தில், குற்றங்கள் அற்றுப்போகின்றன.

ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் எழுதிய கதையொன்று. ஒரு அரசன், ஒரு வளமான பெரிய நிலப்பரப்பைக் காட்டி, 'இந்த நிலத்தில் ஒருவன் எவ்வளவு தூரம் ஓடி சுற்றி வருகின்றானோ, அவனுக்கு அந்த இடம் முழுவதும் சொந்தம்' என்று அறிவித்தான். மண்ணாசை பிடித்த ஒருவன் ஓடத் தொடங்கினான். 'இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்' என்று ஓடினான், ஓடினான்... இறுதியில் மாரடைப்பால் செத்து விழுந்தான். 'இனி அவனுக்கு ஆறடி நிலமே போதுமானது' என்று கதையை முடிக்கிறார். நாடுகள் பலவும் நெப்போலியன் போனபார்ட்டுக்கு அடிபணிந்த போதிலும் அதிகார ஆசை அடங்காததால், "என் அகராதியில் தோல்வி என்ற வார்த்தைக்கு இடமில்லை" என்ற அவரது வாக்குப் பொய்யாய் போனது.

ஒருமுறை பெரும்படையுடன் சென்று கொண்டிருந்த அலெக்ஸாண்டரிடம், ஒரு ஞானி எதிர்பட்டு, 'எங்கே செல்கிறாய்?' என்று கேட்டார். அவன் 'அடுத்த நாட்டின் மீது படையெடுத்துப் போகிறேன்' என்றான். அவர். 'எதற்காக?' என்றார். 'அதற்கும் நானே அரசனாக வேண்டும். அதற்காகதான்' என்றான். அவர், 'அதைப் பிடித்த பிறகு என்ன செய்வாய்?' என்று கேட்டார். அவன், 'அதற்கடுத்த நாட்டைப் பிடிப்பேன்' என்றான். 'சரி, உலகத்தையெல்லாம் பிடித்துவிட்டாய். பிறகு என்ன செய்வாய்?' என வினவினார். 'ஊருக்குத் திரும்புவேன். உலகத்துக்கெல்லாம் நான்தான் மாமன்னன் என்ற மகிழ்ச்சியிலே திளைப்பேன்' என்றான். அவர், 'மூடனே, அதை நீ இப்போதே செய்யலாமே. உலகத்துக்கெல்லாம் நீதான் மாமன்னன் என்று நினைத்துக்கொள். நீ விரும்புகின்ற அந்த மகிழ்ச்சியை இப்போதே அனுபவிக்கலாமே. எல்லாம் நினைப்புத்தானே. உலக மன்னன் என்றாலும் இந்த ஊரில், உன் அரண்மனையில்தான் இருக்கப் போகிறாய். என்ன வித்தியாசம் இருக்கிறது?. அதேபோல் நீ உலகை வென்று மீளுவாய் என்பது என்ன நிச்சயம்? போரிலே நீ இறக்கவும் நேரிடலாமே?' என்றார். அலெக்ஸாண்டரோ ஏதோ பைத்தியம் உளறுகிறது என்று அவரின் அறிவுரையை மதிக்காமல் போனான். அவர் சொன்னது போலவே, பல நாடுகளை வென்ற அவன், இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் போது வழியிலேயே காய்ச்சல் வந்து இறந்து போனான்.

புழு தன் உடலில் இருந்து சுரக்கும் ஒருவகை திரவத்தால் தன்னைச் சுற்றி வலையைப் பின்னி, அதிலேயே சிறைப்படுவதுபோல், நாமும் ஆசை வலையை உருவாக்கி, அதில் அகப்பட்டுகொள்கிறோம். புழு சிறைப்பட்ட நிலையிலேயே சிக்கி சீரழியாமல், தனது முயற்சியால் கூண்டை உடைத்து அழகிய வண்ணத்துப்பூச்சியாக வெளியேறி சிறகை விரிக்கிறது. நாமும் ஆசையினால் சூழ்ந்துகொண்ட துன்பக் கூட்டை மனத் திண்மையுடன் உடைத்தெறிவோம்.

வசந்தம் வீசும்

## முதலாம் ஆண்டு நினைவு



Rev.Mother
**D.Baslis Mari,** FSAG

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான் 11:25

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 16-05-1928 |
| மறைவு | : | 04-10-2019 |
| முதல் வார்த்தைப்பாடு | : | 05-01-1951 |
| நித்திய வார்த்தைப்பாடு | : | 05-01-1954 |

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 04-10-2020 காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னையின் ஆன்ம ஈடேற்றத்திற்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
ஆரோக்கியசாமி, கரோலின்மேரி
குடும்பத்தினர்.

பேராலயப் பங்கு, புதுவை.

# இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

**யார் இந்த நகோமி?**

இயேசு பிறந்த ஊராகிய யூதாவிலுள்ள பெத்லகேம் ஊரைச் சார்ந்த எலிமலேக்கின் மனைவிதான் நகோமி. மக்லோன், கிலியோன் ஆகிய இரு புதல்வர்களின் தாய் இவர். ஓர்பா, ரூத்து இவர்களின் மாமியார் இவர்.

**பிழைப்பு தேடி மோவாபு சென்ற நகோமி (ரூத் 1:1)**

ஆண்டவர் தந்த உயிரைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காக, கணவனுக்குச் செவிமடுத்து, கொடிய பஞ்சத்திற்கு விடைகொடுத்து, மோவாபு செல்ல சம்மதித்தார் நகோமி. இவ்வாறு சொந்த ஊரைவிட்டு தம் இருபுதல்வர்களோடும் புலம் பெயர்ந்தது நகோமி குடும்பம்.

**நட்டு வைத்த நிலத்தில் கனிதந்த நகோமி (ரூத் 1:3)**

விதைக்கப்பட்டதோ பெத்லகேம், நடப்பட்டதோ மோவாபு. பிழைப்பிற்காக மோவாபு நாட்டில் நடப்பட்ட நகோமி, நலமாய் வளர்ந்து வளமாய் கனிதந்தார். தம் இரு புதல்வர்களுக்கும் இனம், குலம் என்ற பிரிவினைகளைக் கடந்து மோவாபு பெண்களை மணம் செய்து வைத்தார். இறைவனால் தரப்பட்ட மோவாபு நிலத்தை மோட்சமாய்க் கருதி தமது குடும்பத்தில் மகிழ்வோடு வாழ்ந்தார் நகோமி.

**துன்பச் சூழலுக்குள்ளும் ஆசிமொழி பகர்ந்த நகோமி (ரூத் 1:8-9)**

கணவரோடும், தம் இரு புதல்வர்களோடும், புதிதாய் இணைந்திட்ட இரு மருமகள்களோடும், மகிழ்வாய் வாழ்ந்திட்ட நகோமியின் மீது இழப்பு என்ற இடியும்-மின்னலும் மொத்தமாய் விழுந்தது. உயிராய் நேசித்த கணவரும், கண்களாய்த் திகழ்ந்த புதல்வர்களும் சரிந்தனர். பெண்கள் மூவரும் விடப்பட்டனர். ஆண்கள் மூவரும் எடுத்துக்கொள்ளப்பட்டனர். ஆண் அஸ்திவாரங்கள் மூன்றும் அழிந்ததால், பெண்கள் மூவரும் துணையில்லா கைம்பெண்களாயினர். அப்பொழுது நகோமி தன் மருமக்களிடம், **“உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிச் செல்லுங்கள். இறந்தவர்களுக்கும், எனக்கும் நீங்கள் பரிவு காட்டியதுபோல், ஆண்டவரும் உங்களுக்குப் பரிவு காட்டுவாராக. நீங்கள் இருவரும் மீண்டும் மணம் செய்துகொண்டு நலமுடன் இல்வாழ்க்கை நடத்த ஆண்டவர் அருள்புரிவாராக! என்று சொல்லி அவர்களை அணைத்து முத்தமிட்டார்.”** இவ்வாறு எல்லாம் இழந்து துன்பச் சூழலுக்குள் உழன்றபோதும், மருமகள்களுக்கு ஆசிமொழி கூறினார் மாமி நகோமி.



**கருத்துரை – 43**

**நகோமி (Naomi)**

**ரூத்து 1-4**

**மருமகளை மகள்போல் நேசித்த மாமி நகோமி (ரூத் 1:16-17)**

**“நீர் செல்லும் இடத்திற்கே நானும் வருவேன். உமது இல்லமே எனது இல்லம். உம்முடைய இனமே எனது இனம். உம்முடைய தெய்வமே எனக்கும் தெய்வம். நீர் எங்கே இறப்பீரோ அங்கேயே நானும் இறப்பேன். அங்கேதான் என் கல்லறையும் இருக்கும். சாவிலும் உம்மைவிட்டு நான் பிரியேன். அப்படிப் பிரிந்தால் ஆண்டவர் என்னைத் தண்டிப்பாராக!”** என்றார் மருமகள் ரூத்து. மருமகள் ரூத்தின் அன்பு நிறைந்த இந்த வார்த்தைகள், நகோமி மாமியிடம் விளங்கிய தாயன்பைப் படம் பிடித்துக்காட்டுகிறது. இதிலிருந்து தனது புதல்வர்களின் மனைவிகளை மருமகள்களாக நினையாது, தனது மகள்களாவே நினைத்து நேசித்திருக்கிறார் என்பது புலப்படுகிறது.

**மருமகளை மகிழ்வித்த சுயநலமில்லா நகோமி (ரூத் 4:10-13)**

பெத்லகேமில் பஞ்சம் நீங்கியபின், அங்கு திரும்பினர் மாமியும், மருமகளும். சுயநல எண்ணம் சற்றும் இல்லாத நகோமி, எப்படியேனும் கைம்பெண் ரூத்திற்கு மறுமணம் செய்து வைக்க முயற்சித்தார். தனது முயற்சியில் வெற்றியும் பெற்று போவாசு என்ற இளைஞனுக்கு ரூத்தை திருமணம் செய்து வைத்தார். போவாசு நல்ல மனிதன் என்றதால் நகோமி எவ்வாறு அவரை வாழ்த்துகிறார் பாருங்கள். **“வாழ்வோர்க்கும், இறந்தோர்க்கும் என்றும் பேரன்பு காட்டும் ஆண்டவர் அவருக்கு ஆசி வழங்குவாராக”** என்றார். ரூத்து ஈன்றெடுத்த ஓர் ஆண்மகவையும் மார்போடணைத்து அதைத் தாய் போல் பேணி வளர்த்தார் நகோமி.

**இறையாட்சிப் பணியில் நகோமியின் பங்கு**

மீட்பு வரலாற்றில் கடவுளின் திட்டத்தைச் செயல்படுத்தும் பயனுள்ள ஒரு கருவியாகிறார் நகோமி. துன்பங்களின் நடுவிலும் கடவுளிடமிருந்து ஆசியைப் பெற தம்மால் ஆனதைச் செய்ததால், உண்மையிலேயே ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர் என்பது புரிகிறது. நல்லவை நிகழ்ந்தபோதெல்லாம் கடவுளைப் புகழ்ந்தார். மகிழ்ச்சியுள்ள மனைவியாய், மாசற்ற மாமியாய், தோள்கொடுக்கும் தோழியாய், ஆற்றல்மிகு ஆசிரியராய், தன்னிகரில்லா தலைவியாய், தாய்மை நிறை தாயாய், பரிவுள்ள பாட்டியாய் திகழ்ந்த நகோமி மாமிகள் அனைவருக்கும் ஒரு சிறந்த உதாரணம் ஆவார்.

**நகோமி மாமியின் நம்பிக்கை வார்த்தைகள்.**

அகவொளியும், குண அழகும்
ஒருங்கே இணையப்பெற்ற **நட்சத்திரமாய்** வாழ்!
மின்னி ஜொலிக்கும் பண்புகளைக் கொண்ட
**நவரத்தினமாய்** வாழ்!
அன்பென்னும் வாசத்தால்
பிறரை அரவணைக்கும் **நறுமணமாய்** வாழ்!
உயிராற்றலும் ஆன்மீக ஆற்றலும்
நிறையப்பெற்ற **நவதானியமாய்** வாழ்!
பாசமுள்ள பேச்சால்
பிறரை ஆற்றுப்படுத்தும் **நந்தவனமாய்** வாழ்!
சுமைகள் அனைத்தையும்
தாங்கிப் பிடிக்கும் **நங்கூரமாய்** வாழ்!
**அப்போது எம்மைக் காத்த தேவன்**
**உங்களையும் கைவிடாது காப்பார்.**

# விவிலியப் பார்வையில் கொரோனா



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.

வூகான் மாநிலத்தில் தோன்றி உலகம் முழுவதையும் மூச்சுத் திணற வைத்துக் கொண்டிருக்கும் கொரோனா நோயைப் பற்றிப் பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்த நோய் எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? எப்போது முடியும்? இதுபோன்ற பல கேள்விகளை பலரும் முன்வைத்து விவாதிக்கின்றனர். மருத்துவர்கள் மருத்துவக் கோணத்திலும், பொருளாதார நிபுணர்கள் பொருளாதாரக் கோணத்திலும், சமூகவியலாளர்கள் சமூகவியல் கோணத்திலும், இயற்கையின் ஆர்வலர்கள் இயற்கையின் கோணத்திலும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் கிறிஸ்தவர்களாகிய நாம் விவிலியப் பார்வையில் கொரோனாவை பற்றி ஆராய்வோம்.

இறைவன் இந்த உலகைப் படைத்தபோது மிகவும் அழகாக, தூய்மையானதாகப் படைத்தார். மனிதர்களைப் படைத்தபோதும் அவர்களை பாவமில்லாமல் பரிசுத்தமான நிலையில் படைத்தார். ஆனால் மனிதர்கள் கடவுளின் விருப்பத்திற்கு மாறாக பாவச் சேற்றில் விழுந்தனர். இவ்வாறு மண்ணுலகில் பாவம் பெருகியது. எப்போதெல்லாம் மண்ணுலகில் பாவம் பெருகியதோ அப்போதெல்லாம் கடவுள் பாவச் சேற்றில் விழுந்த மனிதனைக் கழுவித் தூய்மைப்படுத்த பல அழிவுகளை, கொள்ளை நோய்களை மனிதர்கள் மேல் அனுப்பினார். அவற்றுள் சில:

**1. தொடக்க நூல் 6: 11-13**: அப்பொழுது கடவுள் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது, பூவுலகு வன்முறையால் நிறைந்திருந்தது. கடவுள் மண்ணுலகை உற்று நோக்கினார். இதோ! அது சீர்கெட்டுப் போயிருந்தது. மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடந்து வந்தனர். அப்பொழுது கடவுள் நோவாவிடம் பின்வருமாறு கூறினார்: "எனது முன்னிலையிலிருந்து மனிதர் எல்லாரையும் ஒழித்துவிடப் போகிறேன். ஏனெனில், அவர்களால் மண்ணுலகில் வன்முறை நிறைந்திருக்கின்றது. இப்பொழுது நான் அவர்களை மண்ணுலகோடு அழிக்கப் போகிறேன்'' என்றார். எனவே கடவுள் உலகின்மேல் வெள்ளப் பெருக்கை அனுப்பினார்.

**2. தொடக்க நூல் 18 &19:** சோதோம் மற்றும் கொமோரா நகர்களில் பாவம் பெருகியதால் கடவுள் அந்நகர்களை அழிப்பதற்காகச் செல்கிறார். ஆபிரகாமின் அண்ணன் மகன் லோத்து அங்கே குடியிருந்ததால், தீயவரோடு சேர்த்து நல்லவரையும் அழித்து விடுவீரோ என்று ஆபிரகாம் மன்றாடுகிறார். நீதிமானாக வாழ்ந்த லோத்தும் அவன் குடும்பத்தாரும் கடவுளின் இரக்கத்தால் காப்பாற்றப் படுகின்றனர். பாவம் பெருகியிருந்த சோதோம், கொமோரா நகரங்கள் நெருப்பு மற்றும் கந்தகத்தால் அழிக்கப்பட்டன.

**3. விடுதலைப் பயணம் 3:9-10:** "இதோ இஸ்ராயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன். எனவே இப்போதே போ, இஸ்ராயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னை பார்வோனிடம் அனுப்புகிறேன்.'' மனித மாண்பின்றி மக்களை அடிமைப்படுத்திய எகிப்தியரை கடவுள் 10 கொள்ளை நோய்களை அனுப்பி அழித்தொழித்தார்.

இந்த வகையில் கொரோனா நோயும் மனிதனின் பாவபெருக்கத்தின் காரணம்தானோ! என்று எண்ணத் தோன்றுகிறது. இன்று நீதி, நேர்மை, உண்மை, பிறரன்பு, மனித நேயம் போன்றவை மறைந்து கொலை, கொள்ளை, அநீதி, ஊழல், பொய்மை மலிந்துவிட்டன. சிறிய காரியங்களில் இருந்து பெரிய செயல்கள் வரை மனச்சான்றுக்கு செவிமடுக்கிறவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அனைத்து நிலைகளிலும் குற்றங்கள் அதிகரித்துவிட்டன என்பதை எவரும் மறுக்கவியலாது. எனவே, மனிதன் தன்னுடைய வழியைச் சரி செய்தால் இறைவன் மனமிரங்குவார். கொரோனாவும், கொரோனா வந்து விரைவில் மூச்சுத் திணறி இறந்துவிடும்.





பிறப்பு : 6-02-1960

இறப்பு : 14-10-2008

திருமதி. A. **நிர்மலா சாந்தாமரி**

# விண்ணக வாழ்வின் 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**"ஆண்டவரின் கையில் நீர் அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்"**

**ஜெபம்**

அன்பின் இறைவா! இவ்வுலகில் அன்பின் உருவாய், பொறுமையின் சிகரமாய், நட்பின் இலக்கணமாய்த் திகழ்ந்து தன் வாழ்வின் கடமைகளை முடித்து எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணுலகிற்கு உம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட உமது விசுவாசியாகிய *A.* **நிர்மலா சாந்தாமரி** அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்தருளும்படி இறைஞ்சி மன்றாடுகிறோம். ஆமென். - ஒரு கர்.மங்.திரி.

கணவர்: **அருளானந்தம் அன்துவான்**
**மற்றும் குடும்பத்தினர்**
**அரியாங்குப்பம்.**

**நினைவுத் திருப்பலி:**
**14-10-2020 காலை 6.00 மணிக்கு**
**அரியாங்குப்பம், ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும்.**

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



திரு.**A.அந்தோணிசாமி**

மலர்ந்தது : **21-03-1930**
உதிர்ந்தது : **07-10-2019**

ஆண்டவரே என் ஆற்றல்,
என் மீட்பும் அவரே (எசா.12.2)

இறைவா இவ்வுலகில் நீர் எங்களுக்கு கொடுத்த பெரிய ஆசீர்வாதம் திரு. அ. அந்தோணிசாமி. செபமாலையின் மீது அதிகம் பக்தி உள்ள எம் தந்தையை தள்ளிவிட்டு விடாதேயும். தஞ்சம் என்று வந்த இவரை, எங்கள் தந்தையை உம் மலரடியில் சேர்த்துக் கொள்வீர் என்று முழுமனதுடன் வேண்டுகிறோம் – ஆமென்.

*1அரு.1மங்.1திரி.*

பிரிவால் துயருறும்
மனைவி : அ. அந்தோணியம்மாள்
மகன் : அ. மேத்யூ
மருமகள் : ம. சம்மனசுமேரி
பேரப்பிள்ளைகள்:
மே.ரோஸ்மேரி ஆடம்ஸ்
மே.எ–சபெத் ஜெகதீஸ் விமலன்
மே.மரிய அந்தோணி
கொள்ளுபேரப்பிள்ளைகள்:
ஆ.டாமியன் ஜுன், ஆ.அட்டியன் ஜுன்
ஜெ . இம்மான்வேல்
மற்றும் குடும்பத்தினர்.
விழுப்புரம்

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

மண்ணில்: 07-11-1922



விண்ணில்: 05-10-2019

**B. கித்தேரி அம்மாள்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான் 11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05-10-2020 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வில்–யனூார் புனித லூர்து அன்னை திருத்தலத்தில் திருப்ப-நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மகன் : C. ஜோசப்ராஜ்
மருமகள் : கேத்ரின்
பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன்கள் மற்றும் உறவினர்கள்.
வில்–யனூார்



# நேரில் மறைந்து... நினைவில் கலந்த
# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய் திகழ்வாய் உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய் - எசா 62.3).







**மண்ணில் பிறப்பு**
**16-07-1970**

**விண்ணில் பிறப்பு**
**07-10-2019**

## திரு. I. அந்தோணிராஜ் M.A.,B.Ed.,

(Teacher, St.Joseph's Hr.Sec.School, Cuddalore.)

*வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம், இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் (உரோ.14.8)*

இகமது போற்றும் நல் இணையோர் திருவாளர்கள்
இருதயராஜ் - மரியதெரேசா ஈன்றெடுத்த தலைமகனே
கோடி அற்புதரின் நாமம் தாங்கியே - இத்
தரணியில் அந்தேணிராஜ் ஆக உதித்தாய்!
ஐவரில் மூத்தவராய் - அன்பிற்கினிய அண்ணனாய்,
மனைவி, பிள்ளைகள், உடன்பிறப்புகளின் பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் - பாசத்தை
பகிர்ந்தளித்து நேசமுடன் நெஞ்சினில் நிறைந்தாய்!
கடலூர் புனித வளனார் மேனிலைப்பள்ளியில்
கற்ற மாணவர்க்கு நற்றவப் பணியாற்ற
கடவுளின் வரம்பெற்றீர்! மாணவர்க்கு அறிவின் சுடரானீர்
கருணையின் வடிவானீர்! கலங்கரை விளக்கானீர்
கமழ்ந்தாய் சந்தனமென, வாழ்ந்தாய் நல்லாசிரியரென.

கண்ணிமைக்கும் நேரம் கண்மறைந்தனன்
காலமெல்லாம் மீளாத்துயரத்தில் எமை ஆழ்த்தினன்
கண்ணுறக்கம் ஏது? நீயில்லாதபோது
கண்ணீரும் குறையவில்லை வருத்தமும் மறையவில்லை
நீயின்றி நெஞ்சமதில் நிரந்தர வெற்றிடம் - உம்
நினைவன்றி ஆறுதல் பெறுவது யாரிடம்
வருடமொன்று கூடியது நீரெம்மை பிரிந்து
வாழ்ந்திடக்கூடுமோ உமையாம் மறந்து
திரும்பும் திசையெங்கும் தோன்றுதே உம்உருவம்
அரும்பும் நெஞ்சினில் உம்நினைவுகள் ஆயிரம்
இரக்கம் சுரக்கும் இறைவனின் இதயம்
அருளட்டும் உமக்கே நிலைவாழ்வின் பரிசை
ஒருநாள் காண்போம் விண்ணில் திண்ணமே
அந்நாள்வரையில் நெஞ்சில் நிலைத்திருக்கும் உம் எண்ணமே!

**நினைவுத் திருப்பலி- அன்னாரின் ஆன்ம இளைபாற்றிக்காக 07-10-2020**

தூய அந்திரேயா ஆலயம், காலை 6.00 மணி, ரெட்டியார்பாளையம், புதுவை.
தூய சவேரியார் ஆலயம், காலை 10.00 மணி, உப்பளம், புதுவை.
தூய இருதய ஆண்டவர் பசி-க்கா, காலை 6.00 மணி, புதுவை.
தூய வியாகுல அன்னை ஆலயம், காலை 6.00 மணி, திண்டிவனம்.

பிரிவால் துயருறும்

**அம்மா, மனைவி, பிள்ளைகள், உடன்பிறந்த சகோதரன், சகோதரிகள்,**
**மைத்துனர்கள், மைத்துனி, உடன்பிறந்தோரின் பிள்ளைகள்,**
**உறவினர்கள் மற்றும் நண்பர்கள்** - புதுச்சேரி.

✝

வடக்கன்குளம் ஷராப். உ.ப. மிக்கேல் நாடார் மகன் வழி பேத்தியும்,
இறைவனில் வாழும் எனது அன்பு மனைவி



திருமதி. **இனிகோ மேரி (எ) வென்சி இனிகோவின்**

## 81-வது பிறப்பின் நினைவு நாள்
## 08-10-2020

| மண்ணில் | மண வாழ்வில் | விண்ணில் |
| --- | --- | --- |
| 8-10-1939 | 16-05-1962 | 30-05-2013 |
| வடக்கன்குளம் | வடக்கன்குளம் | நாகர்கோவில் |

**உன் உடல் மறைந்தாலும்,**
**என் உள்ளம் உன்னை மறப்பதில்லை**

என்றும் உன் நினைவில்
**D.M. James Martin**
அன்புக் கணவன் **Cell : 9488129050**

தலைமை எழுத்தர் (ஓய்வு),
மாவட்ட நீதிமன்றம்,
நாகர்கோவில்.

மக்கள் :

**J. JACQULINE,** M.Sc.,M.Ed.,M.Phil.,
P.G. Asst. (Rtd.)

**Dr. J. JANIE SOPHIYA,** M.B.,B.S., D.G.O.
Samuvel Hospital, Thingal Nagar

**J. JANCY ROSANA,** B.Sc.,B.Ed.
Immaculate Hr. Sec. School,
Ariyankuppam, Puthuchery.

**Dr. J.JULIUS XAVIER SCOTT,** M.D.,D.C.H.
Dip.N.B.(Paed.) Hemato- Oncology (Australia)
Sree Ramachandra Medical College & Hospital,
Porur, Chennai.

மருமக்கள் :

**ANTONY ARULRAJ,** M.A.,M.BA.,CAiiB.,B.G.L.
Manager, I.O.B. (Rtd.)

**Dr. S. WESLY JESUKUMAR,** B.D.S.
Thingal Nagar

**M. EDWIN FELEX PRINCE,** M.A.,B.Ed.
P.G. Asst. (Rtd.)

**M. JENETLIN BRINDHA,** M.Sc.,M.Phil.

பேரப்பிள்ளைகள் :

Dr. **Jiju Antony,** *M.D. (AN)*
Dr. **W. Ajay Sam,** *M.D. (Gen. Med.)*
Er. Mrs. Fiona **E. Josy,** *M.E.*
Selvi **Shriya Vency Scott**
Dr. **Ritu Martini,** *M.B.,B.S.,Dip.NB.,(AN)*
Selvi **Ajina Sam,** *M.B.,B.S.*
Dr. Romario **E.Jery,** *BDS.*
Selvi **Shanya Scott**

கொள்ளுபேரன் : **V. Louie Madav Ogistan**

## கோவி(ட்)ல் வழிபாடு
### வழிபாட்டின் விபரீதங்கள்!!!

19

அருட்திரு.V.S.தோமினிக் சாவியோ,
பங்குதந்தை, பாத்திமாபாளையம்.



பல மைல் தொலைவிலிருந்து நாரியப்பனூர் அந்தோணியார் கோயிலுக்கு குடும்பத்தோடு வந்தார் அந்தோணிசாமி. சும்மா வரவில்லை. கையில் ஒரு கொழுத்த ஆட்டுக்கிடாயோடு வந்தார். ஆட்டுக்கிடாயை குருவிடம் கொண்டுவந்து மந்திரித்துவிட்டு கோயிலின் பின்புறம் இருக்கும் ஆலமரத்தடிக்கு குடும்பத்தோடு சென்றார். அங்கே ஆட்டை வெட்டி பிரியாணி செய்வதற்காக குடும்பமே பரபரப்பானது. இதற்கிடையில் ஆலயத்தில் திருப்பலி தொடங்கியது. அந்தோணிசாமி ஓடிச்சென்று திருப்பலியை எந்த குருவானவர் நிறைவேற்றுகின்றார், எந்தெந்த குருக்களெல்லாம் இருக்கின்றார்கள் என்று பார்த்துவிட்டு வந்து, மீண்டும் பிரியாணி செய்யும் வேலையைத் தொடர்ந்தார். பிரியாணி வாசனை பீடம்வரை எட்டியது. திருப்பலி முடிந்தது, பிரியாணியும் தயாரானது. திருப்பலி முடிந்த உடனே கொஞ்சம் பிரியாணியோடு வந்தார் அந்தோணிசாமி. "சாமி. இந்த பிரியாணியை மந்திரிச்சி கொடுங்க" என்று சொல்லி மந்திரித்துவிட்டு பிரியாணி சாப்பிடச் சென்றுவிட்டார். குடும்பமே ஆலமரத்தடியில் அமர்ந்து பிரியாணி சாப்பிட்டுவிட்டு அடுத்த ரயில் ஏரி வீடு சென்றனர். ஊரில் அந்தோணிசாமியைப் பார்த்த ஆரோக்கியசாமி, "என்னப்பா, கோயிலுக்கு போனியே... எல்லாம் எப்படி இருந்தது?" என்று கேட்டார். "ம்ம்ம்... எல்லாம் நல்லா இருந்தது. அந்தோணியாருக்கு பிரியாணி செஞ்சி போட்டோம்..." என்றார். அந்தோணியார் பிரியாணி கேட்கவில்லை, அவரின் செப, தப, செயல்களைத்தான் கேட்கிறார் என்பது அந்தோணிசாமிக்கு தெரியவில்லை.

நம்மில் பலரின் வழிபாடு இந்த **பிரியாணி வழிபாடு**தான். சாமி பிரியாணி செய்து சாப்பிடுவது, சாமி பெயரால் சுற்றுலா செல்வதும்தான் இன்று பிரபலமான வழிபாடாக மாறிவிட்டது. நம் வழிபாட்டில் இருக்கும் விபரீதமும் இதுதான். கோவிட்-19 இதுபோன்ற அர்த்தமற்ற வழிபாட்டுக்குத் தடை விதித்திருப்பது ஒருகோணத்தில் பார்த்தால் நல்லது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**வாடிக்கையான வாழிபாடு** நம் வழிபாட்டில் இருக்கும் அடுத்த விபரீதம். எனக்குத் தெரிந்த ஒரு பெண் தினம்தோறும் தவறாமல் திருப்பலிக்கு வருவார். ஆலயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமர்வார். திருப்பலியின் ஒவ்வொரு அசைவும் அவருக்கு அத்துப்படியானது. எனவே எந்தவித உணர்வுப்பூர்வமான இயக்கமும் இன்றி திருப்பலி முடிந்ததும் சென்று விடுவார். நம்மில் பல குருக்கள், துறவியர்களின் வழிபாடும் இப்படித்தான். வழிபாடு வாடிக்கையான நிகழ்வாகிவிட்டால் வழிபாட்டின் பலன் விபரீதம்தான்.

**வேடிக்கையான வழிபாடு** நாம் சந்திக்கும் அடுத்த விபரீதம். ஆலயத்திற்கு ஆடம்பரமாகக் கிளம்பி வந்து, திருப்பலி முழுவதும் ஆலயத்திற்கு வெளியே நின்று கொண்டு, குரு என்ன செய்கிறார், கன்னியர்கள் என்ன செய்கிறார்கள், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையெல்லாம் கைகட்டி வேடிக்கைப் பார்த்துவிட்டு அமைதியாக வீடு திருப்புவோர் பலர். இதற்கு பெயர்தான் வேடிக்கை வழிபாடு. திருப்பலி மற்றும் வழிபாடுகளில் இடம் பெரும் சடங்குகள், பாடல்கள், செபங்கள் அனைத்தையும் பாரத்து, கேட்டு, இதயத்திற்கு எடுத்துச் செல்வதுதான் அர்த்தமுள்ள வழிபாடு. வழிபாட்டில் நடக்கும் எல்லாவற்றையும் வேடிக்கைப் பார்த்துவிட்டுச் செல்வதை விபரீத வழிபாடு என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது.

**கேளிக்கை வழிபாடு** பற்றி கேள்விப்பட்டதுண்டா? ஆல்பர்ட் என்ற இளைஞன் அன்றாடம் மாலையில் கோவிலுக்கு வருவான். கோவில் வளாகத்தில் தன் நண்பர்களோடு நின்று கொண்டு பேசி, சிரித்து மகிழ்வான். திருப்பலிக்கு முன்னும் பின்னும் வேதியரோடு இணைந்து பல வேலைகளைச் செய்வான். திருப்பலி முடிந்து எல்லாரையும் வழியனுப்பி விட்டுதான் வீட்டிற்குச் செல்வான். ஒருநாள் ஆலய வளாகத்திற்கு வரவில்லை என்றாலும் எதையோ இழந்ததுபோல் இருக்கிறது சாமி என்பான். நல்ல பையன். எந்த தப்புத் தண்டாவும் செய்யமாட்டான். ஆனால் திருப்பலியில் ஒருநாளும் அவன் பங்கெடுத்ததில்லை. இதுதான் கேளிக்கை வழிபாடு.

பிரியாணி வழிபாடு, வாடிக்கை வழிபாடு, வேடிக்கை வழிபாடு, கேளிக்கை வழிபாடு இவை போன்ற வழிபாடுகளால் நாம் கடவுளின் அருளைப் பெற முடிவதில்லை. உடலை மனதோடும், மனதை உடலோடும், இந்த இரண்டையும் கடவுளோடும் இணைப்பதே வழிபாடு. ஆனால் மேற்சொன்ன இந்த வழிபாடுகளால் உடலும் மனமும் கடவுளோடு இணைக்கப்படுவதில்லை. எனவே இத்தகைய வழிபாடுகளால் விளைவது விபரீதங்களே.

அது என்ன விபரீதங்கள்? அர்த்தமுள்ள வழிபாடு நம் உடலையும் ஆன்மாவையும் உறுதிபடுத்துகின்றது. கடவுளைப் பற்றிய புனித உணர்வு நம்முள் எதிர்மறை எண்ணங்களை அகற்றி, நேர்மறை சக்தியை வளர்க்கின்றது. ஆனால், மேற்சொன்ன வழிபாடுகள் நமக்குள் வெறுமையை மட்டுமே உருவாக்குகின்றன. தினமும் ஆலயத்திற்கு சென்று நற்கருணை உட்கொண்டாலும் மனதில் மிஞ்சுவது வெறுமையே. ஆன்மாவும் உடலும் வெவ்வேறு கோணங்களில் செயல்படத் தொடங்குகின்றது. உடல் விரும்புவதை ஆன்மாவும், ஆன்மா விரும்புவதை உடலும் எதிர்க்கின்ற நிலையை நம்மால் உணர முடியும்.

கொரோனா காலம் நம் வழிபாடு எத்தகையது என்று சோதித்தறிய நேரம் ஒதுக்கி இருக்கின்றது. திருப்பலி மற்றும் வழிபாடுகள் நடைபெறாத காலத்தில் நம் உள்ளத்தில் வெறுமையும், விரக்தியும் மட்டுமே மிஞ்சியிருந்ததென்றால் நாம் மேற்சொன்ன வழிபாட்டில் ஏதோ ஒன்றைத்தான் பின்பற்றி இருக்கின்றோம். மாறாக, வழிபாடுகளற்ற இந்த ஊரடங்கு காலத்தில் நம் உள்ளத்தில் திருப்பலி மற்றும் வழிபாட்டில் பங்கேற்க வேண்டும் என்ற ஆசையும், தாகமும் அதிகரித்திருந்தால் நாம் அர்த்தமுள்ள வழிபாட்டை இதுகாலமும் நிகழ்த்தி இருக்கின்றோம் என்று அர்த்தம்.

நம் வழிபாட்டை சோதித்தரியலாமா?

**2021 ஆம் ஆண்டிற்கான பஞ்சாங்கம்**

அச்சில் உள்ளது, நூற்றுக்கும் மேல் தேவைப்படுவோர் முன்பதிவு செய்யவும்.

**2020-2021 ஆம் ஆண்டிற்கான சந்தா**

புதுப்பித்துக் கொள்ளவும். மணியாடர் செய்பவர்கள் தங்கள் **சந்தா எண்ணை** மறக்காமல் குறிப்பிடவும்.

Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.

சென்ற வாரத் தொடர்ச்சி

# கிறிஸ்தவக் குறியீடுகளும் அடையாளங்களும்

அருள்திரு. A.ஆரோக்கியராஜ், முதல்வர்,விரியூர்.

## 2. சுருக்கெழுத்து அடையாளங்கள்

### II) வார்த்தைச் சுருக்கெழுத்து (Monogram)



வார்த்தைச் சுருக்கெழுத்தில் முதலாவதாக வருவது "சிக்லா" எனப்படும். ChiRho – அதாவது கிரேக்க மொழியில் பெரிய எழுத்தில் XP என்றும் எழுதுவார்கள். இது மிகவும் பழமையான கிறித்துவக் குறியீடு. கான்ஸ்டன்டைன் மன்னன் கி.பி 326 ல் தனது அரசின் நாணயத்தில் இதைப் பதிக்கச் செய்தான். இதனால் இந்த சுருக்கக் குறியீடு ஐரோப்பா முழுவதும் பரவியது. கிறித்துவத்தின் அடையாளமாகவே இது (சிலுவை போல்) மாறிப்போனது. கி.பி 2 ம் நூற்றாண்டில் மறைசாட்சிகளின் கல்லறைகளிலேயே இவை காணப்படுகின்றன. கிறிஸ்து என்ற பெயரைக் கிரேக்க மொழியில் XPISTOS என எழுதுவர். இதன் முதல் இரண்டு எழுத்துகள் XP இந்த இரண்டு எழுத்துகளையும் ஒன்றன்மீது ஒன்று வைக்கும் போது ☧ என்ற குறியீடு உருவாகிறது. இதனை சிக்லா (Sigla) என்று அழைப்பர்.

இதனைப்பற்றிய மற்றொரு வரலாறும் உண்டு. கி.பி 312 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் தேதி கான்ஸ்டன்டைன், மாக்சென்சியுஸ் (306-312) என்ற உரோமை அரசனுக்கு எதிராக புரிந்த போரின்போது மி–வியன் பாலம் என்ற இடத்தில் வானிலே ஒரு அறிகுறி தோன்றியது அதில் ☧ என்ற குறியீடு தோன்றியதாகக் கூறினார். மேலும் (in hoc signo vinces) "இந்த அடையாளத்தால் நீ வெல்வாய்" என்ற குரலொ– வானி–ருந்து கேட்டதாகவும் கான்ஸ்டன்டைன் கூறினார். எனவே அனைத்து படைவீரர்களும் இந்தச் சின்னத்தை தாங்கி போர் புரியச் செய்தார். கி.பி 312 அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி மாக்சென்சியுஸ் கொல்லப்பட்டு கான்ஸ்டன்டைன் மன்னனானார். இந்த சிக்லாவில் இன்னும் சில அடையாளங்களைக் காண்போம்.

a)  இதில்  கிரேக்க சிலுவை வடிவில் இருப்பது 'X' (Chi) அதன் நிலைத்தண்டில் P(Rho) குறிக்கப்பட்டுள்ளது. அதன் இரு பக்கமும் A மற்றும் U என்ற எழுத்துகள் பதிக்கப்படும். இது கிறிஸ்து முதலும் முடிவுமானவர் எனப் பொருள்படும்.



b)  XPISTOS NOSTER. அதாவது கிறிஸ்து என்பதனை கிரேக்க மொழியிலும் நமது என்பதை இலத்தினிலும் கொண்டு நமதாண்டவர் இயேசு கிறிஸ்து என்பதன் சுருக்கக் குறியீடு இது.

2) I H S



இயேசு என்ற பெயரின் கிரேக்க வடிவம் ÉÇÓÏÕÓ இதில் முதல் இரண்டு எழுத்து மற்றும் கடைசி எழுத்து (அ) முதல் மூன்று எழுத்துகளை மட்டும் எடுத்துக் கொண்டால் இந்த சுருக்கக் குறியீடுகளைப் பெறலாம் இதனை "கிறிஸ்டோகிராம்" (Christogram) எனவும் குறிப்பிடுவர். மேலும் $\overline{IHS}$ என்று கோடு வரைவது வார்த்தையானது சுருக்கப்பட்டுள்ளது. (Abrivation mark) என்பதன் அடையாளமாகும்.

எனவே $\overline{JHS}$, $\overline{IHC}$, $\overline{IH}$, $\overline{IH\Sigma}$ இவை அனைத்தும் இயேசு என்னும் சுருக்கக் குறியீடு ஆகும். அதே போன்று கிறிஸ்து என்பதனை கிரேக்க மொழியில் ÉÇÓÏÕÓ என பெரிய எழுத்துகளிலும் ÷ñéóôïò என சிறிய எழுத்துகளிலும் எழுதுவர். எனவே இந்த பெயரின் அடிப்படையில்

i) $\overline{XPC}$ = $\underline{XP}$ÉCÔi$\underline{C}$ = கிறிஸ்து

ii) $\overline{XP}$ = ÉCÔÏC = கிறிஸ்து

iii) $\overline{XPI}$ = CÔÏC = கிறிஸ்து

iv) $\overline{XPS}$ = ÉÓÔÏ = கிறிஸ்து

இதில் Ó or ó என்பது வார்த்தை முடிவில் C or S ஆக குறிக்கப்படும்.

V) $\overline{IX}$ அல்லது என்பது ஒரு முழுமையான குறியீடு எவ்வாறெனில் ÇÓÏÕÓ ÑÉÓÔÏÓ என்ற பெயரின் என்பது இயேசு கிறிஸ்து என்ற பெயரின் சுருக்க குறியீடு ஆகும். கிறிஸ்மஸ் என்பதை Xmas என்றும் கிறிஸ்தவர்கள் என்பதை (Christian) Xtian என்று எழுதுவதன் பொருள் இப்போது நன்று விளங்கும்.

3)  என்பது $\overline{IHS}$ என்ற கிறிஸ்து சுருக்கக் குறியீட்டின் மற்றுமொரு வளர்ச்சியே அல்லது ஆகும். எவ்வாறெனில் கிரேக்க மொழியின் H  ...்து (Capital Letter) பெரிய எழுத்து , சிறிய எழுத்து ...ரதியீடு செய்யப்பட்டு $\overline{IHS}$ க்கு மேலே இருக்கும் ...ற சுருக்க குறி h ன் மேற்பகுதியில் ...ன் குறுக்குச் சட்டமாக மாற்றப்பட்டு உருவானது பிறகு அது தனி சிலுவையாகவே மாறிபோனது. 

4) IC XC NIKA இது இயேசு கிறிஸ்து வெற்றிக்கொண்டார் என்பதன் சுருக்க குறியீடு. ÇCÏÕ ÑÉCÔÏ - இதனை $\overline{IC}$ , $\overline{XC}$ என்று குறிக்கின்றனர். மேலும் அவர் வெற்றி கொண்டார் என்பதனை NIKA என்ற சொல் குறிக்கின்றது.



5) INRI – இது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. இயேசுவின் சிலுவையில் தலைக்கு மேல் பிலாத்துவினால் வைக்கப்பட்ட அறிவிப்பு பலகை – எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் (யோவா 19:20) எழுதப்பட்டிருந்தது இலத்தீன் மொழியில் esus azarenus ex udaeorum நாசரேத்தூர் இயேசு, யூதர்களின் அரசன் என்பது நாம் அறிந்ததே. இலத்தீன் மொழியில் J என்ற எழுத்து இல்லை எனவே I பஸ்ன்படுத்தப்பட்டது. இந்த வாக்கியத்தின் முதல் எழுத்துகளை ஒன்று சேர்த்தால் INRI ஆகும்.

– அறிவோம் தொடர்ந்து.

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.